# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

## பாடல்மனனப் போட்டிகளின் பாடல்கள் 2006

## கீழ்ப்பிரிவு (2 பாட்டுகள்) (6-8 வயது)

**காலைக் கதிரவன் நீலத்திரையிற் – செங்**
**கதிர்கள் பரப்பி உதித்திடுமே**
**கோல நிலவைப் பொழிந்த நிலா – எங்கோ**
**கூனிக் குறுகி மறைந்திடுமே.**

**“காகா” வெனக்கரிக் காகங்களும் – சும்மா**
**கரைந்தே கூட்டமும் கூட்டிடுமே**
**தாத்தாவுடன் பாட்டி முதலாக – வீட்டில்**
**சகலரையும் துயில் எழுப்பிடுமே**

**(இளமுருகனார் பாரதி)**

---

## பாடல் மனனப் போட்டிக்கான விதிகள்:

1. போட்டிகளுக்கெனச் சிறுவர்களுக்கான பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டியின் போது உச்சரிப்பு(30), மனனஞ் செய்யும் திறமை (15), பொருளுணர்ந்து கூறுதல் (25), சபை மரபும் ஆதிக்கமும் (30) ஆகியன கவனிக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும்.
2. பாடல் மனனப் போட்டி போட்டி (கீழ்ப் பரிவு)
   போட்டிக்கென பாடல் கொடுக்கப்படும். பாடல்களை மனனஞ் செய்து கூறல் வேண்டும். அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. ஒவ்வொரு போட்டியாளருக்கும் 4 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.
3. போட்டியாளரின் வயது 31-07-2005 அன்றுள்ளபடி கணிக்கப்படும்.
4. மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எமமுடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
5. போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
6. எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

**மேலதிக விபரங்களுக்கு:** E-mail tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970